அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 15/98

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07
1998. ஏப்பிரல் 21 ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின்
செயலாளர்களுக்கும்,

## இலங்கை தொழில்நுட்பச் சேவை பிரமாணக் குறிப்புக்கான திருத்தங்கள்

1995 செப்ரெம்பர் மாதம் 27ஆந் திகதி அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1996 மார்ச்சு 22 ஆந் தேதிய 915/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைமூலம் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவைபற்றிய பிரமாணக்குறிப்பின் 4ஆம் 6ஆம் பந்திகளை திருத்துவதற்காக 1998 பெப்ரவரி மாதம் 18 ஆந் தேதிய அமைச்சரவை கூட்டத்தின் போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02. இத் திருத்தங்கள் 1998 பெப்ரவரி மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதுடன் உரிய காலத்தில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை மூலம் பகிரங்கப்படுத்தப்படும்.

03. இலங்கை தொழில் நுட்பச் சேவை பிரமாணக் குறிப்பின் 4ஆம் 6ஆம் பந்திகளுக்கான திருத்தங்கள் பின்வருமாறு.

04. 4.0 ஆம் பந்தி- குறிப்பு (அ), (ஆ), (இ) ஆகியன பின்வருமாறு திருத்தப்படுவதுடன் பந்தி (ஈ) மாறாதிருக்கும் "உ" புதிதாகச் சேர்க்கப்படும்.

(அ) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது 6.4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதையொத்த தொழில்நுட்பத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பக்காரர்கள் வகுப்பு 11 "ஆ" பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். ஏதேனும் விசேட பயிற்சிகள் தேவைப்படின் அதுவும் பெற்றுக் கொடுக்கப்படும்.

(ஆ) "வரைவு அலுவலர்களின் பயிற்சிப் பாடநெறி அல்லது தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமானதென இலங்கைத் தொழில் நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற சான்றிதழ்களை உடைய விண்ணப்பக்காரர்கள் பயிற்றப்படும் தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதுடன் அப்பயிற்சியின் ஒருவருட கால கோட்பாடுகளுடன் கூடிய செய்முறைப் பயிற்சியின் பின்னர் வகுப்பு 11 "ஆ" பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தொழில்நுட்பச் சேவையின் பயிற்சித்தரமொன்றுக்குத் தகுதி பெறும் உத்தியோகத்தர் ஒருவர் அதாவது 6:3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளை மட்டும் பெற்றுள்ள (க.பொ.த.(உ/த) க.பொ.த.(சா/த) பரீட்சைத் தகைமைகள் மட்டும்) ஆனால் தொழில் நுட்பத் தகைமைகளைப் பெற்றிராத விண்ணப்பக்காரர்கள் பயிற்றப்படும் தரத்தில் அமர்த்தப்படுவார்கள். மூன்று (03) வருடங்களையோ அல்லது அதற்கு மேலான பயிற்சிக் காலப்பகுதியைத் திருப்திகரமாக முடித்துக் கொள்ளும் பயிலுநர்கள் இரண்டு (02) வருடங்களின் முடிவில் பயிற்றப்படும் தரத்தில் தொடர்ந்தும் இருக்கையில் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு II " ஆ" பிரிவின் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

(உ) இரண்டு வருட காலங்களுக்கு மேற்பட்ட பயிற்சியை வேண்டி நிற்கும்ஏதேனும் விசேட சேவைகள் இருப்பின் அந்த மேலதிகப் பயிற்சிக்காக, மேலதிகப் பயிற்சி பெற்ற ஒரு வருடத்திற்கு ஒரு வேதன ஏற்றம் வீதம் வழங்கும் அடிப்படையில் பயிற்சியின் முடிவில் II "ஆ" வகுப்புக்கு ஆட்சேர்க்கப்படுவதுடன் மேலதிகப் பயிற்சிக் காலம் II "அ" பிரிவுக்குப் பதவி உயர்த்தப் படுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்படும் காலமாகக் கணிக்கப்படும்.

05. தற்போதுள்ள 6 : 3 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்படுகிறது.

**6.3 ஆம் பந்தி**

பயிற்றப்படும் தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு கீழே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளையோ அல்லது (II)இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தொழில்நுட்பத் தகைமைகளையோ விண்ணப்பக்காரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(I) தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் விவசாயம் ஆகிய விஞ்ஞானப் பாடங்களில் சேவைக்குச் சம்பந்தமான இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும் மொழி அல்லது இலக்கியம், கணிதம், எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது.

(11) தேசியத் தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது வரைவு அலுவலர்களின் பயிற்சிப் பாடநெறி அல்லது இலங்கைத் தொழில்நுட்பச் சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறேதேனும் தொழில் நுட்பத்தகைமையொன்று.

6.3 பந்தியின் கீழ் உள்ள குறிப்பு 4.0 பந்தியின் குறிப்பு (உ) ஆக உள்சேர்க்கப்படுவதுடன் 6:3:1 6:3:2 6:3:3 ஆக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப பந்திகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

6:3:1 மேலே (1)இன் கீழ் அடிப்படைக் கல்வித் தகைமைகளை மட்டும் பெற்றுள்ள (க.பொ.த(உ/த) மற்றும் க.பொ.த (சா/த) விண்ணப்பக்காரர்கள் சேவைக்குச் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்கின்ற இரண்டு வருட கால கோட்பாடுகளுடன் கூடிய செய்முறைப் பயிற்சியை திருப்திகரமாக முடித்து சம்பந்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்ததன் பிற்பாடு மேலே 4.0 ஆம் பந்தியின் (இ) இன் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வகுப்பான இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 11 "ஆ" பிரிவுக்கு நியமிக்கப்படுவர்.

6:3:2 திணைக்கள ஊழியர்களில் இருந்து திணைக்களத்தின் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் படி பயிற்றப்படும் தரத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பக்காரர்களும் மேலேயுள்ளது போன்று சேவைக்குச் சமந்தப்பட்டபாடத்திட்டத்திற்கிணங்க இரண்டு வருட கால கோட்பாடுகளுடன் கூடிய செய்முறைப் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்துவிட்டு, சம்பந்தப்பட்ட பரீட்சையிலும் சித்தியடைந்ததன் பின்னர் இலங்கைத் தொழில்நுட்பச் சவையின் வகுப்பு 11 "ஆ" பிரிவில் உள்ளடக்கப்படுவர்.

6:3:3 தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது 6:3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதை ஒத்த ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் தொழில் நுட்பத்தகுதியொன்றைப் பெற்றுள்ள விண்ணப்பகாரர்கள் பயிற்றப்படும் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப் படுவதுடன், சேவைக்குச் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு இணங்க பெற்றுக் கொள்கின்ற ஒரு வருட கால கோட்பாடுகளுடன் கூடிய செய்முறைப்பயிற்சியைத் திருப்திகரமாக முடித்துக் கொண்டதன்பின்னர், மேலே 4.0, ஆம் பந்தியின் (ஆ) குறிப்பின் படி வகுப்பு 11 "ஆ" பிரிவில் உள்ளடக்கப்படுவர். இங்கு இவ்விண்ணப்பக்காரர்கள் மேலே 6.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள, அடிப்படைக் கல்வித் தகைமைகளை (க.பொ.த (உ/த) க.பொ.த.(சா/த)ப் பூர்த்தி செய்திருக்கத் தேவையில்லை.

06. தற்போதுள்ள 6:4 ஆம் பந்தி நீக்கப்படுவதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பந்தியும் உப பந்திகளும் பதிலீடு செய்யப்படுகின்றன.

**6:4 ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்:**

**6:4:1 வெற்றிடங்களின் 90% வீதமானவை வெளிவிண்ணப்பக்காரர்கள் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல்:**

இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் II " ஆ" பிரிவுக்கு வெளிவாரி விண்ணப்பக்காரர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது பெற்றிருக்க வேண்டிய தொழில் நுட்பத் தகைமைகளாகப் பின்வரும் தகைமைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(I) மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஹாபிடி தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா.

(II) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசியப் பொறியியல் டிப்ளோமா.

(III) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா.

(iv) திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில் நுட்ப டிப்ளோமா.

(V) இலங்கை பொறியியல் நிருவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியற் பரீட்சையின் முதலாம் பகுதியில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ்.

(vi) மேற்போந்த தொழில்நுட்பத் தகைமைகளுக்குச் சமமானதென இலங்கை தொழில்நுட்பச் சேவைச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள்.

குறிப்பு:

மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பக்காரர்கள் அடிப்படைக் கல்வித் தகைமைகளை அதாவது க.பொ.த(உ/த)மற்றும் க.பொ.த (சா/த) தகைமைகளை பூர்த்தி செய்திருக்கத் தேவையில்லை.

**6:4:2 வெற்றிடங்களில் 10 வீதமான திணைக்கள ஊழியர்களுக்கு:**

மொழி அல்லது இலக்கியம் கணிதம்,எண்கணிதம்உட்பட விஞ்ஞானத்திற்கு திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து சம்பந்தப்பட்ட துறையில் பத்து (10) வருட அனுபவமுள்ள திணைக்கள ஊழியர்கள் திணைக்களப் பரீட்சை யொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பயிற்றப்படும் தரத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். பயிற்றப்பட்ட தொழில் நுட்பச் சேவை

வகுப்பு 1 தரம் II இல் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட காலங்கள் சேவையாற்றியுள்ளவர்களே இதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

புகையிரதத் திணைக்கள ஊழியர்களுக்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக் கொள்கைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய வீதங்களின் கீழ் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற தொழில்சார் போட்டிப்பரீட்சையின் திருப்திகரமானபெறுபேறுகளுக்கும் இணங்க பயிற்றப்படும் தரத்திற்கு உள்ளாக்கப்படும்.

07. தற்போதுள்ள 6:5, 6:6 பந்திகளும் 6:6:1, 6:6:2, 6:6:3 உபபந்திகளும் நீக்கப்பட்டுவிடும்.

08. மேலுள்ள திருத்ங்களின் மூலம் கூறப்படுகின்றது போல் அந்தந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமைகளை திருத்தம் செய்வதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
பதிற் கடமை புரியும் செயலாளர்
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.